ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2054/3 - 2018 ජනවාරි මස 15 වැනි සඳුදා - 2018.01.15

2054/3 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்: 4/1/ඉ/අත්පත්/80.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3/9/2015/WS/28.

பொது மக்களின் தேவைக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மல்லவபிடிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 725, நாரம்பொல கிராம அலுவலர் பிரிவில் இடங்காபொல கிராமத்தில் அமைந்த, நில அளவை மாஅதிபாரல் 2017.12.30 ஆம் திகதியிடப்பட்டு அளந்து உறுதிப்படுத்தப்பட்ட டங்டர் 420214 ஆம் இலக்க வரைபடத்தின் வலய இலக்கம் 2 ஆம் படிவத்தில் 1 ஆம் இலக்கம் வலயத்தின் படிவ இலக்கம் 5 ஐக்கொண்ட வரைபடத்தின் காணித்துண்டின், இலக்கம் 220 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "கோனகஹமுல வத்த மற்றும் அஸ்லியெத்த" என்னும் காணியில், சுமார் 0.0316 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

**1. காணிதுண்டு இலக்கம் 220 ; கணியின்பெயர்: கோனகஹமுல வத்த மற்றும்; அஸ்லியெத்த விஸ்தீரணம் : 0.0316ஹெக்டயர்**

வடக்கு - 187 ஆம் இலக்க காணித்துண்டு
கிழக்கு - 1 ஆம் இலக்க காணித்துண்டு
தெற்கு - 189 ஆம் இலக்க காணித்துண்டு
மேற்கு - 219 ஆம் இலக்க காணித்துண்டு

உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் -

கிறிஸ்தோகு பதுகே கருணாரத்ண,
இலக்கம் 94,
மஹ வீதிய,
கந்தலாய்

மேற் குறிப்பிட்ட காணிகளுக்கு உரிமை கோருபவரோ அல்லது வேறுதொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2018, பெப்புருவரி

மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சந்திக்க வேண்டும்.

மேலும், 2018 பெப்ருவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக் கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குரிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத் தொகை, அத்தொகை கணக்கீடு செய்த முறையையும் கடிதம் மூலம் இரு பிரதிகளாக அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனை செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆர் எம். பீ. ரத்நாயக,
பிரதேச செயலாளர்,
மல்லவபிடிய.

மல்லவபிடிய பிரதேச செயலகம்,
2018 , சனவரி 12.

2-03

திருத்தம்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. ஸ்ரீ /ஜபுர/காஅ/12/ஆர்டீ (03)

2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1992/53 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் 2016 திசெம்பர் 14 ஆந் திகதி என பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது 2018, சனவரி 24 என திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

அமல் ஜே. எஸ். எஸ். எதிரிசூரிய,
பிரதேச செயலாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

2-04

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.